காலை முரசு

பக்கங்கள் 25

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 09 வியாழக்கிழமை 25.07.2024 அதிர்வு 259

## விக்கிக்கு சுமந்திரன் நன்றி தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

“நான் மூளையை உபயோகித்துச் செயற்படுகின்றேன் என்று விக்னேஸ்வரன் எம்.பி. கூறியமைக்கு முதலில் அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால், அவர் எதனைப் பாவித்துச் 02 ▶

# நொண்டிச்சாட்டுக்களைச் சொல்லி

# தேர்தலைப் பிற்போடவே முடியாது!

## யாழில் சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு

(எஸ்.நிதர்ஷன்)

“பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை உயர் நீதிமன்றம் இடைநிறுத்தியதால் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட முடியாது. நொண்டிச்சாட்டுக்களைச் சொல்லி ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடாது சட்டத்தின் பிரகாரம் அதனை நடத்த வேண்டும். அதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு உண்டு.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம் .ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று யாழ். வர்த்தக சங்கத்தினருடன் நடத்திய கலந்துரையாடலைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பொலிஸ்மா அதிபருடைய நியமனம் சம்பந்தமாக உயர்நீதிமன்றத்திலே இடைக்கால உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பாக 9 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு பல நாட்கள் விவாதிக்கப்பட்டு வந்தன. 02 ▶



# தமிழ்ப் பொது வேட்பாளர் குறித்து தமிழரசு தீர்மானம் எடுக்கவில்லை



## சுமந்திரன் எம்.பி. மீண்டும் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன் )

“தமிழர் தர்பில் இருந்து பொது வேட்பாளர் ஒருவரரை நிறுத்துகின்ற எந்தவொரு தீர்மானத்தையும் இலங்கைத் தமிழரசுக் கட்சி இதுவரையில் எடுக்கவில்லை.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யர்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 02 ▶

# எம்.பி. அல்லாத விஜயகலாவுக்கும் 19 கோடி ரூபா திட்ட நிதி ஒதுக்கீடு

## ரணில் அரசின் புதுவித அரசியல் மாய்மாலம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அபிவிருத்தி நிதியாக தலா ஐந்து கோடி ரூபா அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் அல்லாத ஆளும் கட்சி அமைப்பாளருக்கு 19 கோடி ரூபா அனுமதிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வரவு – செலவுத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட 5 கோடி ரூபா நிதி 02 ▶




“வரும் ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக் கட்சியின் வேட்பாளர் யார் அல்லது யாரை மொட்டுக் கட்சி ஆதரிக்கும் என்பதை நான் உரிய நேரத்தில் முடிவு செய்து சொல்வேன். அந்த வேலையை என்னிடம் விட்டு விட்டு உங்கள் வேலைகளை நீங்கள் பாருங்கள். 02 ▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## நொண்டிச்சாட்டுக்களை...

இந்த வழக்கைக் கொண்டு செல்வதற்கு அனுமதியை வழங்கியுள்ள உயர் நீதிமன்றம், பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை அந்த பதவியில் இருந்து இடைநிறுத்தி உத்தரவு வழங்கியுள்ளது.

ஜனாதிபதியினாலே நியமனம் பெற்ற பொலிஸ்மா அதிபருடைய நியமனம் சட்டபூர்வமானதாக இல்லை என்ற காரணத்தினாலே இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு வந்த பிறகு அமைச்சரவையை அவசர அவசரமாகக் கூட்டிக் கலந்துரையாடுகின்றார்கள் என்ற செய்தி எங்களுக்குக் கிட்டியிருக்கின்றது. அந்தக் கலந்துரையாடலில் ஒரு நிரந்தர பொலிஸ்மா அதிபர் இல்லாத நிலையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்த முடியாது என்ற கருத்து நிலவுவதாக நாம் அறிகின்றோம்.

ஆனால், ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குச் சட்டத்திலே எந்தவிதத் தடையும் கிடையாது என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றேன். எங்களுடைய அரசமைப்பிலே எப்போது ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது மிக மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

அதாவது செப்டெம்பர் 17 ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 17 ஆம் திகதிக்கும் இடையிலே ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டே ஆக வேண்டும். அவ்வாறு தேர்தலை நடத்தும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கையிலேதான் கொடுக்கப்பட்டுள்ளது .

ஆனாலும், ஜனாதிபதியின் கையிலே அது கிடையாது. ஆகவே, தேர்தல்கள் ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் எந்த வித நொண்டிச்சாட்டுக்களையும் சொல்லாமல் உடனடியாகத் தேர்தல் தினத்தை அறிவித்து சட்டத்தின் பிரகாரம் தேர்தல் நடத்தப்பட வேண்டும்." – என்றார்,

## விக்கிக்கு சுமந்திரன்...

சிந்திக்கின்றார் என்று எனக்குத் தெரியவில்லை."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

'என்னுடைய அற்புதமான மாணவன் சுமந்திரனுக்குப் பல்வேறு தகைமைகள் இருந்தாலும் அவருக்குத் தமிழ்த் தேசிய உணர்வு இல்லை. அவர் மூளையை மாத்திரம் பாவித்துச் செயற்படுகின்றார்' – என்று விக்னேஸ்வரன் எம்.பி. அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்த சுமந்திரன் எம்.பியிடம் விக்னேஸ்வரன் எம்.பியின் கருத்து தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"விக்னேஸ்வரன் சொல்லுகின்ற விடயங்களுக்கு நான் பதில் சொல்லப் போறதில்லை. ஆனால், என்னுடைய மூளையை உபயோகித்து நான் சிந்திக்கின்றேன் என்று அவர் சொன்னமைக்கு என்னுடைய நன்றியை அவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒரு ஆசிரியனாக தன்னுடைய மாணவர்கள் மூளையைத்தான் பாவித்துச் சிந்தித்துக் கூறுகின்றனர் என்று அவர் கண்டுபிடித்திருக்கின்ற கண்டுபிடிப்பு மிகவும் அற்புதமானது.

ஆனால், அவர் எதனைப் பாவித்துச் சிந்திக்கின்றார் என்று எனக்குத் தெரியவில்லை." – என்றார்.

## தமிழ்ப் பொது வேட்பாளர்...

"தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற வியத்தில் தமிழரசுக் கட்சி இது சம்பந்தமாக இரண்டு மத்திய செயற்குழுக் கூட்டங்களிலே எடுத்த முடிவானது தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் தொடர்பில் நாங்கள் எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை என்பதாகும்.

நாங்கள் எடுத்த தீர்மானம் என்னவென்றால் ஜனாதிபதித் தேர்தலிலே நிற்கின்ற பிரதான வேட்பாளர்களோடு நாங்கள் பேரம் பேசி அவர்களுடைய தேர்தல் அறிக்கையிலே அவர்கள் சொல்லுகின்ற விடயங்களை அவதானித்து யாருக்கு எங்கள் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்கின்ற செய்தியை அதற்குப் பின்னர் நாங்கள் அறிவிப்போம் என்று சொல்லியிருக்கின்றோம்.

அதன்படி பிரதான வேட்பாளர்களில் தங்களை வெளிப்படையாக அடையாளம் காட்டியிருக்கின்ற சஜித் பிரேமதாஸவோடும் மற்றது அநுரகுமார திஸாநாயக்கவோடும் எங்கள் கட்சி அலுவலகத்திலே உத்தியோகபூர்வமாக நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றோம்.

அத்தோடு எங்களுடைய எதிர்பார்ப்புக்களை அவர்களுக்கு நாங்கள் சொல்லியிருக்கின்றோம். அவர்களுடைய தேர்தல் அறிக்கை வெளிவந்த பின்னர் என்னென்ன விடயங்கள் அதிலே உள்ளடக்கப்பட்டு இருக்கின்றன, எவற்றையெல்லாம் பகிரங்கப்படுத்தி சொல்லுகின்றார்கள் என்பதை அவதானிப்போம்.

ஆனால், வேறு எவரும் இன்னமும் தங்களை வேட்பாளர் என்று அறிவிக்கவில்லை. அப்படி அறிவிக்கின்ற பட்சத்தில் அவர்களோடும் இதே மாதிரியான பேச்சுவார்த்தையை நாங்கள் நடத்துவோம்." – என்றார்.

## எம்.பி. அல்லாத...

தற்போது 6 நாடாளுமன்ற உறுப்பினர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன் ஆகியோருக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரான சி.வி. விக்னேஸ்வரனுக்கான நிதி இதுவரை அனுமதிக்கப்படவில்லை.

இதேநேரம் எட்டாவது நாடாளுமன்ற உறுப்பினரான அங்கஜன் இராமநாதனுக்கு 15 கோடி ரூபா அனுமதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களுக்கான அபிவிருத்தி நிதிகளுக்கான நிதியை மாவட்ட செயலகத்திற்கு விடுவித்தமையோடு நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தலைவராக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட அமைப்பாளர் திருமதி விஜயகலா மகேஸ்வரனால் சிபார்சு செய்யப்பட்ட 19 கோடி ரூபா பெறுமதியிலான திட்டங்களுக்கும் விஜயகலா மகேஸ்வரனின் பரிந்துரை எனக் குறிப்பிட்டு நிதி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

வரும் 15 ஆம் திகதி முதல் உங்கள் உங்கள் பகுதிகளில் நமது தேர்தல் பிரசார வேலைகளை முழுமூச்சில் முன்னெடுப்பதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை இப்போதே சென்று ஆரம்பியுங்கள்!"

– இப்படி மொட்டுக் கட்சியின் தலைவர்களைப் பணித்திருக்கின்றார் அக் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவரான பஸில் ராஜபக்ஷ.

நேற்று முற்பகல் கொழும்பு விஜயராமவில் உள்ள மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கட்சியின் மூத்த தலைவர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் இப்படி குறிப்பிட்டிருக்கிறார் அவர்.

இந்தக் கூட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ ஆகியோர் உட்பட கட்சியின் மூத்த – முக்கிய – பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

"வரும் 16ஆம் திகதி அநுராதபுரத்தில் எமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளைப் பெருத்த எடுப்பில் ஆரம்பிப்போம். அநுராதபுரத்தை முடித்துக் கொண்டு கதிர்காமத்திலும், கண்டியிலும் அடுத்தடுத்துப் பிரசார வேலைகள் நடக்கும். அதைத்தொடர்ந்து நாடு முழுவதிலும் முழு வீச்சில் பிரசாரத்தை நாம் முன்னெடுக்க வேண்டும். அதற்கான தகவல் முற்கூட்டியே உங்களுக்குத் தரப்பட்டு விட்டது. தயாராக வேண்டியது உங்கள் கடமை. " – என்ற சாரப்பட பஸில் அங்கு அறிவுறுத்தல் விடுத்தார் என அறிய வந்தது..

"கல்யாணம் நிச்சயம் நடக்கும். யார் மாப்பிள்ளை என்பதை நான் தீர்மானித்து அறிவிப்பேன். மாப்பிள்ளை யாரென்று பார்த்திருப்பதை விடுத்து, கல்யாணத்துக்கான ஏற்பாடுகளை நீங்கள் செய்யுங்கள்!" – என்று ஏற்கனவே கட்சிப் பிரமுகர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தார் பஸில் ராஜபக்ஷ.

அவர் கல்யாணம் என்று குறிப்பிட்டது தேர்தலை. மாப்பிளை என்றது வேட்பாளரை.

ஆக,மொட்டுக் கட்சியை பொறுத்த வரை கல்யாணம் (தேர்தல்) நிச்சயம். ஆனால் இன்னும் மாப்பிள்ளை (வேட்பாளர்) யார் என்பதுதான் முடிவில்லை. பாவம் மொட்டு கட்சி என்ற பொம்பளை. வேட்பாளர் யார் என்று தெரியாமலேயே தேர்தல் கல்யாணத்துக்கு தயாராக வேண்டிய நிலைமை அதற்கு.

சீர், செனத்தி, சீதனம் (நிதி) தாராளமாகக் கொட்டிக் கிடப்பதால் எந்த மாப்பிள்ளையையும் (வேட்பாளரையும்) பிடித்து வருவேன் என்ற அதிகாரத் திமிர் பஸிலுக்கு. அதுதான் இந்தப் பேச்சு என்று நினைக்கிறேன்.

இதற்கிடையில் நேற்று மாலை மொட்டுக் கட்சித் தலைவர்களான மஹிந்த, பஸில், சாகர காரியவாசம், ரோஹித அபயகுணவர்தன ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் முக்கிய சந்திப்பில் ஈடுபடவிருந்தனர் என்று நேற்று மாலையே ஒரு செய்தி வெளியானது.

சந்திப்பின் விவரம் இன்று வெளியாகும் என எதிர்பார்க்கலாம்.





# ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவான எம்.பிக்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு

## சுமந்திரன் பகிரங்க குற்றச்சாட்டு

**(எஸ்.நிதர்ஷன்)**

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கி வருகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே தற்போது அதிகளவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனத் தெளிவாகப் புலப்படுகின்றது.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று வர்த்தக சங்கத்தினருடன் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“எங்களுக்குச் சொல்லப்பட்டதன் பிரகாரம் தற்போது பகிரப்பட்ட நிதி ஒதுக்கீடு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஒதுக்கப்படும் என்று முதலில் சொல்லப்பட்டது.

ஆனால், ஆரம்பத்திலே அந்த நிதி சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டு ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணிக்கப்பட்டிருந்தனர்.

இது சம்பந்தமாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நானும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் ஏற்கனவே கதைத்திருந்தோம்.

எங்களுக்கு வழமையான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டைப் போலவே திட்டமுன்மொழிவுகளை வழங்குமாறு சொல்லப்பட்டது. அதன்படி யாழ். மாவட்ட அரச அதிபர் வழமை போல் எமக்குக் கடிதங்களை எழுதி

னார். அந்தக் கடிதங்களுக்குப் பதில் அளித்து நாம் திட்டங்களை வழங்கினோம்.

ஆனால், எங்களுடைய முன்மொழிவுகள் இழுத்தடிக்கபட்டன. இவ்வாறான நிலைமையில் தற்போது எங்களது முன்மொழிவுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அறிகின்றோம்.

ஆனால், இதற்கு முன்னரே தேர்ந்தெடுக்கப்பட்ட சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த நிதி ஒதுக்கபட்டுள்ளது. இது சம்பந்தமாக நாடாளுமன்றத்திலும் நிரல் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு கேள்வி எழுப்பப்பட்டது .

ஆகையினால் ஜனாதிபதி தனக்கு ஆதரவளிக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று கருதுபவர்களுக்கு அதிகமான நிதி ஒதுக்கீட்டை வழங்கியுள்ளார் என்பது தெளிவாகத் தெரிந்தது.

இந்த விடயம் பொதுவெளியில் குற்றச்சாட்டாக முன்வைக்கப்பட்ட பிறகு மற்றவர்களுக்கும் இந்த நிதி தற்போது பகிரப்பட்டுள்ளது என்று அறிகின்றேன்.”

– என்றார்.

# மீண்டும் வடக்குக்கு வருகின்றார் ரணில்

**(ந.லோகதயாளன்)**

வடக்கு மாகாணத்துக்கு 3 நாள் பயணமாக ரணில் விக்கிரமசிங்க மீண்டும் வருகை தரவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி முதல் 4 ஆம் திகதி வரையான 3 தினங்கள் ஜனாதிபதி வடக்கில் தங்கியிருந்து விசேட கலந்துரையாடல்களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் காலப்பகுதியில் 2 ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டத்–துடன் பல சந்திப்புக்களும், 3 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தில் விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஷ

இதேபோன்று 4 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் விசேட கலந்துரையாடலுடன் காணி உறுதி வழங்கும் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் விடாது கல்வியைத் தொடர வேண்டும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த திறமையான அனைத்து மாணவர்களும் கல்வியை இடைவிடாது தொடர வேண்டும். இதற்காக ஜனாதிபதி நிதியம் புலமைப் பரிசில்களை வழங்கும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சாதாரண தர, உயர் தர மாணவர்களைப் போன்று பிரிவெனா மற்றும் பிக்குனிகளுக்கான கல்வி நிறுவனங்களில் கற்கும் பிக்குகள் மற்றும் பிக்குனிகளுக்கு ஜனாதிபதி நிதியத்தின் புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் கீழ் 3000 பேருக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று அலரி மாளிகையில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக ஜனாதிபதி நிதியத்தின் கீழ் மற்றுமொரு புலமைப்பரிசில் திட்டமாக முழு நாட்டையும் உள்ளடக்கி இந்த புலமைப்பரிசில் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில் –


“ஜனாதிபதி நிதியத்தின் புலமைப் பரிசில் வழங்கும் திட்டத்தின் கீழ் மற்றுமொரு புதிய திட்டத்தை ஆரம்பித்திருக்கிறோம். அதனால் பிரிவெனாக்களில் பயிலும் சாதாரண மாணவர்களுக்கு உதவி வழங்கப்படுகிறது. அவர்களுக்குரிய தொகையை வங்கிகளில் வைப்புச் செய்துள்ளோம்.

கடந்த நான்கு வருடங்கள் கஷ்டத்திலிருந்த நாடு இன்று வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு வருகின்ற காரணத்தினால் நாட்டில் ஸ்திரத்தன்மை ஏற்பட்டுள்ளது. அதனால் மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டியுள்ளது. அதற்காகவே ‘அஸ்வெசும’, ‘உறுமய’ போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

தொடர்ச்சி▼








# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் விடாது கல்வியைத் தொடர வேண்டும்

தொடர்ச்சி▲

மேலும், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த திறமையான மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்காக ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக பல புலமைப்பரிசில் திட்டங்களை அறிமுகப்படுத்தினோம்.


நாட்டின் பொருளாதாரச் சரிவினால் கிராமப் பகுதிகளில் இருந்த விகாரைகளும் பிக்குகளும் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டது. எத்தகைய காரணங்களுக்காகவும் பிக்குகளின் கல்வி நிலை சரிவடைய இடமளிக்க கூடாது.

அதற்காகவே இந்த திட்டத்தை பிக்குகளுக்காகவும் பிக்குனிகளுக்காகவும் செயற்படுத்துகிறோம். புத்த சாசனம் குறித்து கவனம் செலுத்தும்போது பிக்குகள் சமுதாயத்தைக் கட்டியெழுப்பக்கூடிய சூழலை நாட்டில் உருவாக்க வேண்டியுள்ளது. அதற்காக முன்னெடுக்கக்கூடிய முக்கியமான திட்டமாக இந்த புலைமைப் பரிசில் திட்டத்தைக் குறிப்பிடலாம்.

நாட்டில் பௌத்த கல்வியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். மேலும் இது மேம்படுத்தப்பட வேண்டும். பிரிவென் முறைமை ஆரம்பிக்கப்பட்ட போது அதற்கு உதவிகளை வழங்கும் வாய்ப்பு கிடைத்திருந்தது. நாட்டில் எத்தகைய பிரச்சினைகள் இருந்தாலும் ஒரு போதும் அதற்குரிய பொறுப்புக்களை கைவிடப்போவதில்லை."– என்றார்.








Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
JULY
27
2024
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
PRINTING PARTNER
E PAPER PARTNER
DESIGN BY
FM
88.9 HD3 & 105.9
INK DRIP
DESIGN WOLF.CA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உண்மைக்கான உறுதி

கொவிட் தொற்றுக் காலத்தில் இஸ்லாமியர்களினதும் கிறிஸ்தவர்களினதும் மார்க்க நெறிமுறைகளுக்கு மாறாக, மேற்படி தொற்றால் உயிரிழந்த அந்த மக்களின் ஜனாஸாக்களையும் பூதவுடல்களையும் வல்வந்தமாக எரித்த கோட்டாபய ராஜபக்ஷ அரசின் இன வெறியாட்டத்திற்கு இப்போது மன்னிப்புக் கேட்க முன் வந்திருக்கின்றது ரணில் விக்கிரமசிங்கவின் இந்த அரசு.

நல்ல விடயம்தான். வெளியில் பார்த்தால் அப்படித்தான் தெரிகின்றது. உள்சூக்குமம் அப்படியல்ல. கோட்டாபய அரசு இவ்விடயத்தைக் கையாளுகையில் அதன் இனவெறித்தனம் - பேரினவாதவெறிப்போக்கு - அப்பட்டமாக வெளித் தெரிந்தது. ஆனால் இப்போது அதைத் தனது வாக்கு வங்கிக்காக கையாளும் ரணில் அரசின் பேரினவாத சூழ்ச்சித்தனம் அந்த நடவடிக்கைக்குள் வெளிப்படாமல் மறைந்து கிடக்கின்றது. ஆயினும், கோட்டா அரசின் இனவெறிதனத்துக்கு ரணில் அரசின் இந்த அம்சடக்கு நடவடிக்கை கொஞ்சமும் குறைந்தது அல்ல என்பதுதான் உண்மை.

இந்தச் சூழ்ச்சித்தனம் முஸ்லிம் தலைவர்களுக்கு - குறிப்பாக தென்னிலங்கை அதிகாரத் தரப்புக்குக் காவடி தூக்குவதன் மூலம் அரசியல் சுயலாபம் பெற அலையும் முஸ்லிம் தலைவர்களுக்கு - பொருட்டாக இல்லாமல் போகலாம். ஆனால் முஸ்லிம் மக்கள், சிங்களப் பேரினவாதத்தின் இந்த சுத்துமாத்துக்கு இடம் அளித்து, ஏமாந்து, மசிந்து போய் விடக்கூடாது.

மன்னிப்புக் கோருவது என்பது உண்மையை மூடி மறைப்பதற்காகச் சோடிக்கப்படும் அலங்காரமாக இருக்கக்கூடாது. உண்மையை அம்பலப்படுத்துவதுடன்தான் அரசு அதனை முன்னெடுக்க வேண்டும்.

ஆனால், இந்த விடயத்தில் அப்படி நடப்பதாக இல்லை. உண்மையை மூடி மறைத்து, பொய்களை நிலைநிறுத்துவதற்கான ஓர் எத்தனமாகவே இந்த மன்னிப்பு நாடகம் அரங்கேறுகின்றது. அதன் மூலம் சிறுபான்மையினரின் - குறிப்பாக இஸ்லாமியர்களினதும் கிறிஸ்தவர்களினதும் - வாக்குகளைச் சுருட்ட நரித் தந்திரசாலி ரணில் விக்கிரமசிங்க காய் நகர்த்துகின்றார் என்பது அப்பட்டமான உண்மை. தென்னிலங்கைச் சிங்களத்துக்கு நோவராமல், அதைத் தடவிக் கொடுத்தபடி இந்த மன்னிப்பு நாடகத்தை அவர் நகர்த்துகிறார்.

கொவிட் தொற்றுடன் இறந்தவர்களை கட்டாயம் எரிக்க வேண்டும் என்ற 'விஞ்ஞானக் கண்டுபிடிப்பு உண்மை' உலகின் வேறு எந்த நாட்டிலும் கண்டறியப்படாத - இலங்கையில் மாத்திரம் கண்டுபிடிக்கப்பட்ட - அறிவியல்(?) மெய்மையாகும். அச்சமயம் இலங்கையில் அப்படித்தான் படம் காட்டப்பட்டது.

அந்த 'உண்மையை' கண்டறிந்த அந்த 'அறிவு மேதைகள்' யார் அல்லது அந்த அறிவு நபர்களின் பெயரில் கோட்டா ஆட்சிப் பீடம் நடத்திய இனவெறியாட்ட நாடகம்தான் அதுவா என்ற உண்மையை அம்பலப்படுத்திக் கொண்டு மன்னிப்புக் கோரினால் அதில் நியாயம் உண்டு.

மாறாக, அந்த உண்மையை மேலும் மூடி மறைத்து பூசும் மற்றொரு பேரினவாதவெறி நாடகமாக இந்த மன்னிப்பு கோரல் சுத்துமாத்து அமையக்கூடாது.


இது விடயத்தில் வடக்கிலும் கிழக்கிலும் பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்ட பொதுமக்களின் உறவுகள் விடாப்பிடியாக நடத்தி வரும் போராட்டங்களின் ஓர்மம் - உறுதி - திடசங்கற்பம் - இஸ்லாமியரின் தலைவர்களுக்கு வழிகாட்டலாக அமையும் என்று நம்புகிறோம்.

உறவுகளை இழந்தமையால் ஒரு நேர வயிற்றுப்பாட்டுக்குக் கூட வழியின்றிக் கிடக்கும் அந்த மக்கள் காணாமல் போன தங்களின் உறவுகளுக்காக 15 வருடங்களையும் தாண்டி சளைக்காமல் போராடுகின்றார்கள்.

நடந்த உண்மைகளை மறுத்து, நீதியை நிலை நாட்டாமல் தவிர்த்து, பொறுப்புகூறலை உதாசீனம் செய்து - நஷ்ட ஈடு வழங்கல்., நிவாரணம் வழங்கல், மீள நிகழாமையை உறுதி செய்தல் என்ற நாடகங்களை முன்னெடுத்து அரசும் சர்வதேசமும் தமது தலையில் கட்டியடிக்க விரும்பும் சமாளிப்புகளுக்கு இடம் கொடுக்காமல் உறுதியோடு அந்த உறவுகள் போராடி வருகிறார்கள்.

அழிவுகளுக்கும், பின்னடைவுகளுக்கும் மத்தியிலும் உண்மையைக் கண்டறிந்து, நீதியை நிலைநாட்டுவதுதான் மிக முக்கியம் - பிரதானமானது - என்று அதீத உறுதியோடு அவர்கள் போராடுகின்றனர்.

அரசின் மன்னிப்புக் கோரும் நாடக விடயத்தில், அந்த காணாமல் போனோரின் உறவுகளின் உறுதியை - உண்மையைக் கண்டறிவதுதான் மிகப் பிரதானமானது எனப் போராடும் அவர்களின் பிடிவாதத்தை - இஸ்லாமிய மக்களும் தலைவர்களும் தமக்கு வழிகாட்டலாகக் கொள்ள வேண்டும்.



# நாட்டில் உள்ள இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதி











“இலங்கை இளைஞர்கள் தொழில் தேடி வெளிநாடுகளுக்கு செல்வதற்கு மாறாக உள் நாட்டிலேயே இளைஞர்களுக்கு தேவையான வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவதற்குரிய சரியான திட்டத்தை அடுத்த 10 வருடங்களில் செயற்படுத்துவோம்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரியின் 106 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“கடந்த 04 வருடங்களாக கல்விக்கான செலவீனங்களை மட்டுப்படுத்தியிருந்தோம். எனவே இப்போது கல்விக்காக பணம் செலவழித்து புதிய தொழில்நுட்பத்துடன் பாடசாலைக் கட்டமைப்பை ஒழுங்குபடுத்த எதிர்பார்க்கிறோம். இன்று இந்த கண்காட்சியில் கல்லூரி மாணவர்கள் குழு தயாரித்த ட்ரோன் உபகரணங்களைப் பார்த்தோம்.

மேலும், பாடசாலைகளில் செயற்கை நுண்ணறிவு குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. இந்த நடவடிக்கைகளுக்கு பணம் தேவைப்படுகிறது. மேலும், பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். கல்வித் துறையில் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கவும், கஷ்டப் பிரதேச பாடசாலைகளுக்கு உதவவும் முன்வருமான எலோன் மஸ்கிடம் கோரிக்கை விடுத்துள்ளேன். இம்மாத இறுதிக்குள் அவருக்கு இலங்கையில் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான அனுமதிப் பத்திரங்களை வழங்க எதிர்பார்க்கிறோம்.

மேலும், பாடசாலைக் கல்வியை நிறைவு செய்யும் இளைஞர் யுவதிகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். எம்மால் 04 வருடங்களாக தொழில் வாய்ப்புகள் வழங்க முடியவில்லை. எதிர்காலத்தில் இவர்களின் தொகை மேலும் அதிகரிக்கும். அதற்கு தீர்வு காண வேண்டும். இப்பிரச்சினைகள் அதிகரித்தால் நாட்டில் மீண்டும் போராட்டங்கள் வெடிக்கலாம். எனவே, தொழில் மற்றும் வருமான வழிகளை உருவாக்க நாட்டில் பெரிய பொருளாதார மாற்றம் செய்யப்பட வேண்டும்.

1977 ஆம் ஆண்டு இதேபோன்றதொரு சூழலை நாங்கள் எதிர்கொண்டோம். கம்பஹா மாவட்டத்தில் அப்போது தொழிற்சாலைகள் இருக்கவில்லை. கட்டுநாயக்க மற்றும் பியகம வர்த்தக வலயங்களை ஆரம்பித்தோம். சந்திரிகா குமாரதுங்க அத்தனகல்ல பிரதேசத்தில் தொழிற்சாலைகளை ஆரம்பித்தார். இப்போது கம்பஹா மாவட்டத்தில் பல தொழிற்சாலைகள் உள்ளன. அத்துடன் அடுத்த வருடம் கேரகல பிரதேசத்தில் கைத்தொழில் பேட்டை ஒன்றை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம். எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் திருகோணமலைக்கு மாற்றப்படும் போது சபுகஸ்கந்த பிரதேசத்தில் ஒரு பெரிய தொழில் பேட்டையொன்றை உருவாக்க முடியும். புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க புதிய முதலீடுகளைப் பெற வேண்டும். அவற்றை நிறுத்தினால் தொழில் வழங்க முடியாது. அப்போது நாட்டில் போராட்டங்கள் வெடிக்கலாம்.

மேலும், நாட்டில் விவசாயத்தை முன்னேற்றும் வகையில் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். மேலும், சுற்றுலாத் துறையை 25 லட்சத்தில் இருந்து 50 லட்சமாக உயர்த்தி, பாரிய தொழில்நுட்ப பொருளாதாரத்தை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதற்கு புதிய தொழில்நுட்ப அறிவு கொண்ட இளம் தலைமுறையினர் அவசியம். அந்த நோக்கத்திற்காக, 04 புதிய

தொடர்ச்சி▼



# நாட்டில் உள்ள இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்

தொடர்ச்சி ▲

தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் துறைகள் அனைத்திலும் பெரிய புரட்சியை ஏற்படுத்தவும், நாட்டில் புதிய பொருளாதாரத்தை உருவாக்கவும் நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். அந்த புதிய பொருளாதாரம் உருவாக்கப்படாவிட்டால், இந்த நாட்டின் மாணவர்கக்கு எதிர்காலம் இருக்காது.

இன்று நமது இளைஞர்கள் வேலை தேடி அமெரிக்கா, டுபாய், சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு செல்கின்றனர். அந்த நாடுகளில் உள்ள நிலையை ஏன் இலங்கையில் உருவாக்கப்படவில்லை என்று கேட்க வேண்டும். அடுத்த 10 ஆண்டுகளில், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண நாம் நம்மை அர்ப்பணிக்க வேண்டும். நாட்டை முன்னேற்றி புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். இல்லையேல் இந்தக் கல்வியால் நாட்டுக்கு எந்தப் பலனும் கிடைக்காது. அப்படியானால், நாம் எப்போதும் வறிய நாடாகவே இருக்க வேண்டியிருக்கும்.

அடுத்த 10 ஆண்டுகளில் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். அந்த பொருளாதாரப் பரிமாற்றத்திற்கு தேவையான சட்டங்களை கொண்டு வர அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஏற்றுமதி பொருளாதாரம் வலுப்பெற்று உலக சந்தையை வெல்ல வேண்டும். தேரவாத பௌத்தம் இருக்கும் முக்கிய நாடுகளாக இலங்கை, பர்மா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன. மியான்மார் பழைய முறைக்குள் சிக்கியிருக்கிறது. ஆனால் புதிய முறையின்படி முன்னேறிச் செல்வதால், தாய்லாந்து விரைவான முன்னேற்றம் கண்டுள்ளது. எனவே தேரவாத பௌத்தத்தை பாதுகாத்த நாமே எமது நாடு எந்த வழியில் செல்ல வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டும். தாய்லாந்தைப் போன்று பௌத்த சூழலில் உலகச் சந்தையை நாம் வெல்ல வேண்டும். நாம் அனைவரும் எதிர்காலத்தைப் பார்த்து பணியாற்ற வேண்டும். புதிய பொருளாதாரம் உருவாக்கப்படும் போது தொழில் பிரச்சினை தீர்ந்து இலங்கையில் தங்கக்கூடிய சூழல் உருவாகும்."– என்றார்.















# தற்போதைய விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தில் விவசாயிகளை அரசியல் கையாள்களாக்க முடியாது

## விவசாய, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

"உள்நாட்டு விவசாயத்தை ஊக்குவிப்பதற்காக தற்போதைய அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டமிடப்பட்ட விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் காரணமாக இனிமேல் விவசாயிகளை அரசியல் கையாள்களாக்க முடியாது."

– இவ்வாறு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

"2021 பெரும்போகத்தில் உர நெருக்கடி காரணமாக, நெல் உற்பத்தி தடைப்பட்டது. எனவே 2022ஆம் ஆண்டு இந்நாட்டு மக்களின் நுகர்வுக்குப் போதுமான அரிசி உற்பத்தி செய்யப்படவில்லை. அதன் மூலம் ஒரு கிலோ அரிசியின் விலை 500 ரூபாவை தாண்டும் என சிலர் ஊடக சந்திப்புகளில் தெரிவித்தனர்.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பை ஏற்றுக்கொண்டதன் மூலம் உள்நாட்டு நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தன. 2022 சிறு போகத்திற்கு தேவையான யூரியா உரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

மேலும் பெரும் போகத்தில் நெல் உற்பத்திக்கு உரம் கொள்வனவு செய்ய ஹெக்டெயாருக்கு 20,000 ரூபா நிதி மானியம் வழங்கப்பட்டது. இதன் விளைவாக, 2023 ஆம் ஆண்டில் அரசாங்கம் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டி ஏற்படவில்லை. 2023ல் இலங்கையில் நெல் உற்பத்தி 4.5 மில்லியன் மெட்ரிக் தொன்களாகும். நம் நாட்டில் ஆண்டுக்கு 2.4 மில்லியன் மெட்ரிக் தொன் அரிசி தேவை. 2023 ஆம் ஆண்டில், நெல் அறுவடையில் இருந்து சுமார் 03 மில்லியன் மெட்ரிக் தொன் அரிசியை உற்பத்தி செய்தோம்.

அதன்படி கடந்த ஆண்டு நம் நாட்டில் அரிசி மேலதிகமாக இருந்தது. விவசாயிகள் எங்களை நம்பி எமது அறிவுரைப்படி செயற்பட்டனர். அதனால்தான் இந்த நாட்டில் இன்னும் அரிசி மேலதிகமாக இருக்கிறது.

மேலும், கடந்த காலங்களில் சோளத்திற்கு பற்றாக்குறை இருந்ததால், கால்நடை தீவன உற்பத்திக்காக சுமார் 100,000 மெட்ரிக் தொன் அரிசியையும் வழங்கினோம். கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு கால்நடை தீவனமாக அரிசியை வழங்குவதன் மூலம், எமது நாடு சோளத்தை இறக்குமதி செய்ய செலவழித்த பணத்தை மிச்சப்படுத்த முடிந்தது.

05 போகங்களில் நெல் விளைச்சலை இரட்டிப்பாக்குவதே எமது இலக்காகும். இதன்படி, நெற்செய்கைக்கு புதிய விவசாய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி ஹெக்டெயார் ஒன்றின் விளைச்சலை 09 மெற்றிக் தொன்களாக அதிகரிப்பதே எமது இலக்காகும். அதற்கான தொழில்நுட்பப் பேக்கேஜை அறிமுகப்படுத்தவுள்ளோம் என்பதைக் கூற வேண்டும்.

அத்துடன் அநுராதபுரம், அம்பாறை, பொலன்னறுவை, ஹம்பாந்தோட்டை, மொனராகலை, கண்டி ஆகிய விவசாயப் பிரதேசங்களில் அடுத்த 5 போகங்களில் நெல் விளைச்சலை இரட்டிப்பாக்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றோம்.

மேலும், சிறு போகம் முடிந்தவுடன் மூன்றாம் போகத்தில் இடைப் பயிர்ச் செய்கையை உடனடியாகத் தொடங்க விவசாயத் திணைக்களத்திற்கு அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, 2024 ஆம் ஆண்டுக்கான சிறு போகம் முடிவடைந்தவுடன் பயறு பயிரிடும் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம். 2024 சிறு போகத்தில் இதுவரை 4464 ஹெக்டெயார் பயறு பயிரிடப்பட்டுள்ளது. இதன் மூலம் எதிர்பார்க்கப்படும் உற்பத்தி 6500 மெட்ரிக் தொன்களாகும்.

மூன்றாவது போகமாக இடைப்பட்ட போகத்தில், 8943 ஹெக்டேரில் பயறு பயிரிடுகிறோம். இதனால், 6707 மெட்ரிக் தொன் பயறு விளைச்சல் எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி இந்த ஆண்டு 13,407 ஹெக்டேரில் பயறு பயிரிடப்பட்டுள்ளது. 13,207 மெட்ரிக் தொன் விளைச்சல் எதிர்பார்க்கப்படுகிறது.

வருடாந்த பயறு தேவையில் 75 வீதத்தை சிறு போகத்தில் பெறுவதே எமது நோக்கமாகும்.

இந்நாட்டில் ஆண்டுக்கு தேவைப்படும் பயறு 20,000 மெட்ரிக் தொன்களாகும். சிறு போகத்திலும் பெரும் போகத்திலும் பயறு பயிரிடுவதன் மூலம் 18,828 மெட்ரிக் தொன் விளைச்சலை எதிர்பார்க்கிறோம். மேலும், இடைப்பட்ட போகத்திற்கு 01 ஹெக்டெயாருக்கு 25 கிலோ விதை பயறுகளை இலவசமாக வழங்குகிறோம்.

இதன்படி, 01 ஹெக்டெயாருக்கு பயறு பயிர்ச்செய்கைக்கு ஒரு விவசாயிக்கு 25,000 ரூபா பெறுமதியான பயறு விதைகள் வழங்கப்படும். பயறு இறக்குமதியை கட்டுப்படுத்தும் வகையில் இறக்குமதி வரி விதிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் உள்நாட்டு பயறு விவசாயியையும் பாதுகாக்கலாம்.

மேலும் அரசுக்கு சொந்தமான இரண்டு உர நிறுவனங்களையும் ஒரே நிறுவனமாக மாற்றினோம்.

அதன்படி, அதன் பலனை விவசாயிகளுக்கு வழங்க முடிந்துள்ளது. இதனால் 05 வகையான உரங்களின் விலையை 1500 முதல் 2000 ரூபா வரை குறைக்க அரச உர நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கறுவா மற்றும் தென்னை பயிர்ச் செய்கைக்கு இந்த சலுகையை வழங்குவதுடன், தேயிலைக்கான உரங்களின் விலையையும் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் விவசாயிகளின் பிரச்சினைகள் அரசியல் கோசங்களாக மாற்றப்பட்டுள்ளன. அது பல்வேறு போராட்டங்களுக்கு அவர்களைத் தூண்டியது.

ஆனால், தற்போதைய அரசாங்கம் உள்நாட்டு விவசாயத்தை மேம்படுத்துவதற்காகத் தொடங்கியுள்ள விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் காரணமாக தொடர்ந்தும் விவசாயிகளை அரசியல் கையாட்களாக மாற்ற முடியாது."

– என்றார்.

# நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

## ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவிப்பு






“ஆட்சி மாறும் போது கொள்கைகள் மாற்றம் அடைவது நாட்டின் பெரும் பிரச்சினையாகியுள்ளது. எனவே அந்த பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் பல்வேறு நிதி மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளில் சட்ட ரீதியான மறுசீரமைப்புக்களை அரசாங்கம் தற்போதும் மேற்கொண்டுள்ளது,”

-இவ்வாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பு சினமன் லேக் சைட் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற அதிவேக நெடுஞ்சாலைகள் தொடர்பிலான தொழில்நுட்ப மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

”2020 கொவிட் பரவலுக்கு மத்தியிலும் இந்த பணிகள் இடம்பெற்ற நிலையில் பொருளாதார சரிவின் காரணமாக அவற்றை இடைநிறுத்த வேண்டிய நிலை உருவானது. தாமதமாகியேனும் தற்போது இந்தத் திட்டத்தை நிறைவு செய்ய முடிந்திருக்கிறது. இது பொருளாதாரத்திற்கு பெருமளவில் வலு சேர்க்கும்.

அதன்படி 3 தசாப்தங்களுக்கு முன்பாக திட்டமிடப்பட்ட அதிவேக வீதிக் கட்டமைப்பு இப்போது கிடைத்திருக்கிறது. கொழும்பு நகரின் செயற்பாடுகளை இடையூறு இன்றி முன்னெடுத்துச் செல்வதற்கும், கொழும்பு துறைமுகம் மற்றும் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு இடையில் காணப்படும் வாகன நெரிசலை மட்டுப்படுத்துவதற்காகவும் இந்த அதிவேக வீதி அமைந்திருப்பதோடு, நாட்டின் அதிவேக வீதிக் கட்டமைப்புக்களை ஒருங்கிணைக்கும் புள்ளியாகவும் அமையும்.

வாகன நெருக்கடியால் விநியோகச் சேவைகள் தாமதமடைகின்றமையோடு அதனால் நிதியும் வீண் விரயமாகும். அதிவேக வீதிக் கட்டமைப்பு இந்த விரயத்தை குறைக்க உதவும். கொழும்பு நகரின் அபிவிருத்திச் செயற்பாடுகள் எதிர்கால அபிவிருத்திக்கான தேவைகளை கருத்தில் கொண்டு முன்னெடுக்கப்பட்டிருக்காமையும் பிரச்சினையாக காணப்படுகிறது.

மலேசியா - சிங்கப்பூர் போன்ற நாடுகள் வீதிகளை விஸ்தரிக்கும் பணியை ஆரம்பித்துள்ளன. ஆனால் கொழும்பில் அதனை செய்ய முடியாதுள்ளது. காலத்துக்கு காலம் கொள்

தொடர்ச்சி▼







# நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன




தொடர்ச்சி ▲

கைகள் மாற்றப்பட்டமையால் தேவையான காணிகளை தக்கவைத்துக் கொள்ள முடியாது போயுள்ளது. அதனால் கொழும்பு நகரம் பெரும் நெருக்கடிக்கு முகம்கொடுத்திருக்கிறது.

அதிவேக வீதிகளுக்கு மாறாக தற்போதுள்ள ரயில் வீதிகளை மேம்படுத்தல், தூண்கள் மீதான புதிய ரயில் பாதைகளை அமைத்தல், சுரங்க ரயில் பாதைகளை அமைத்தல் போன்ற செயற்பாடுகளும் நெரிசல்களை தவிர்க்க உதவியாக அமையும்.

செலவுகளை பார்க்கும் போது தற்போதுள்ள ரயில் செயற்பாடுகளை மேம்படுத்துவதையே குறைந்த செலவில் செய்ய முடியும். அதுபற்றிய நிபுணத்துவ ஆலோசனைகள் தேவைப்படுகின்றன. புதிய முறைகளை செயற்படுத்தினால் அதற்கான செலவுகளை கட்டணச் சீட்டுக்கள் வாயிலாகவே பெற வேண்டியிருக்கும். அந்தளவு தொகையை செலுத்த நாட்டு மக்களின் வருமானம் போதுமானதாக இல்லை. எனவே புதிய முறைகளுக்குச் செய்ய நீண்ட காலம் தேவைப்படும் என்பதோடு புதிய முறைகள் குறித்து தேடிப்பார்க்க வேண்டியதும் அவசியமாகும்.

ஹொங்கொங் நாட்டில் தனியாருக்கு அரசாங்கத்தின் ரயில் நிலைய காணிகளை வழங்கி சுரங்க பாதையை மேம்படுத்தும் திட்டம் செயற்படுத்தப்பட்டது. அது போன்று நமது நாட்டுக்கு பொருத்தமான முறையொன்றை நாம் செயற்படுத்த வேண்டியது அவசியம்.

ஜப்பானின் உதவியில் இலகு ரயில் வேலைத்திட்டத்தை ஆரம்பித்தோம். ஆட்சி மாற்றத்தோடு அந்தச் செயற்பாடுகள் தடைப்பட்டன. அரசாங்கம் மாறும் போது கொள்கைகள் மாற்றம் பெறுவதும் இந்நாட்டின் மிகப் பெரிய பிரச்சினையாகும். அந்த விடயங்களுக்கு தீர்வை எட்டும் நோக்கிலேயே மத்திய வங்கிச் சட்டம், அரச நிதி நிர்வாகச் சட்டம், பொருளாதார பரிமாற்றச் சட்டங்களை கொண்டு வந்திருக்கிறோம்.

அதேபோல் முதலீடுகள் வரும் போது வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுதல் மற்றும் விரைவாக தீர்மானங்களை எடுத்தல் உள்ளிட்டச் செயற்பாடுகள் ஊடாக படிப்படியாக நாட்டில் முன்னேற்றத்தை ஏற்படுத்தி வருகிறோம்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியால் மக்கள் கடுமையான வாழ்வாதாரச் சிக்கல்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அந்தப் பிரச்சினைகளை நிவர்த்திக்கும் நோக்கில் பல முயற்சிகளை மேற்கொள்கிறோம். பொருளாதார அபிவிருத்திக்கு வீதிக் கட்டமைப்புக்களின் முன்னேற்றமும் மிக முக்கியமானதாகும்.

அதற்காக இந்தியாவுடனான உறவுகளை பலப்படுத்தி வருவதோடு, தரை மார்க்க தொடர்புகளை ஏற்படுத்தும் எதிர்பார்ப்புடன் செயலாற்றுகிறோம். அதற்காக 50 கிலோ மீற்றர் தூரத்துக்கு பாலத்தை அமைக்க வேண்டியிருக்கும். அதனால் புதிய வகையில் பாலம் அமைக்கும் தொழில்நுட்ப அறிவு கிடைப்பதோடு நமது எதிர்கால பொறியிலாளர்களுக்கு நிர்மாணிப்பு தொடர்பிலான தெரிவுகளைப் பெற்றுக்கொள்ளவும் வழிவகுக்கும்.

அதனால் நாடு வளர்ச்சி அடையும். இந்தியாவின் ஏற்றுமதி, இறக்குமதிச் செயற்பாடுகளை இலங்கை துறைமுகத்தின் மூலம் செய்யவதற்கான வாய்ப்பு உருவாகும். அந்நாட்டின் விநியோகச் செலவு 50 சதவீதத்தினால் குறைவடையும். துறைமுகச் செயற்பாடுகளுக்கான வசதிகள் ஏற்படும். ஆனால் இவை சாத்தியமாவதற்கு நிலையான கொள்கைகளுடன் செயற்பட வேண்டியது மிக அவசியமாகும்."– என்றார்.








# யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா எதிர்வரும் 09 முதல் 11 ஆம் திகதி வரை

'யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா - 2024' யாழ்ப்பாணத்தில் மூன்று தினங்கள் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாண வர்த்தக தொழில்த்துறை மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 09ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரையில் மூன்று நாள்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது என நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பான சந்திப்பு யாழில் உள்ள தனியார் விடுதியில் நேற்றைய தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

இலங்கையிலிருந்து மட்டுமல்லாமல் பல்வேறு நாடுகளில் இருந்தும் பல்வேறுபட்ட புத்தக விற்பனை நிறுவனங்கள் மற்றும் வெளியீட்டகங்களின் புத்தகங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படவுள்ளது.

நாம் நமது உடலுக்கு உடற்பயிற்சி செய்வது போல, வாசிப்பு என்பது நம் மனதுக்கும் புத்திக்கும் ஒரு புத்துணர்ச்சி அளிக்கக்கூடியது.

அதிவேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்ப இந்த உலகில் நமது சமூகத்தில் வாசிப்பு கலாச்சாரத்தை மீட்டெடுக்க வேண்டிய தேவை நமக்கு உள்ளது.

அந்த வகையில் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களிடம் வாசிப்பை மேம்படுத்தும் பொருட்டு அவர்களுக்கு தேவையான புத்தகங்களை அவர்களிடம் கொண்டு சேர்க்க வேண்டிய கடமைப்பாடு எமக்கு உண்டு.

உள்நாட்டிலும், தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் ஆர்வமும் பங்கு கொள்ள விருப்பமும் உள்ள புத்தக வெளியீட்டாளர்கள் மற்றும் விற்பனையாளர்களை ஒன்றிணைத்து இந்தப் புத்தகத் திருவிழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு வருடமும் பல புத்தகக் கண்காட்சிகள் நடக்கின்றன ஆனால் யாழ்ப்பாணத்தில், உள்ளூர் மற்றும் சர்வதேச எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்துறை மன்றம் இந்தப் புத்தக கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.

இக் கண்காட்சி வடமாகாணத்தை சேர்ந்த நூலகங்கள், சனசமூக நிலையங்களுக்கும் இந்த புத்தகத் திருவிழா நல்லதொரு வாய்ப்பாக அமையும் என நாம் கருதுகிறோம். பாடசாலைகள் கூட தமது நூலகங்களுக்கு தேவையான புத்தகங்களை இந்த புத்தக திருவிழாவில் பெற்றுக்கொள்ள முடியும்.

புத்தக திருவிழா இடம்பெறும் தினங்களில் புத்தக வெளியீடுகள், அறிமுக நிகழ்வுகள் மற்றும் கலை கலாசார நிகழ்வுகள் என்பவற்றுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடமாகாணத்தை சேர்ந்த அனைத்து மக்களும் இந்த நிகழ்வில் பங்குபற்ற கூடியவாறு இது அமையப்பெற்றுள்ளது.

இக் கண்காட்சி முற்றிலும் இலவசமாக பார்வையிட முடியும். 40 காட்சிக் கூடங்கள் அமைக்கப்படும். அவற்றில் உள்ளூர் வெளியூர் எழுத்தாளர்களின் புத்தகங்களை காட்சிப்படுத்தவுள்ளோம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஊடக சந்திப்பில் யாழ்ப்பாண வர்த்தக தொழில்த்துறை மன்றத்தின் நிறைவேற்று இயக்குனர் கு. விக்னேஷ், வர்த்தகத் தொழில்த்துறை மன்ற தலைவர் கலாநிதி வாசுதேவன் ராசையா மற்றும் உப தலைவர் கலாநிதி செல்லத்துரை திருமாறன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சமூக ஆலோசனைக் குழுக்களுக்கு எதிராக இடைக்காலத் தடை விதிப்பு

அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்காக நியமிக்கப்பட்ட சமூக ஆலோசனை குழுக்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை தடுத்து உயர் நீதிமன்றம் நேற்று இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ள வேட்பாளர்கள் தமது நடைவடிக்கைகளை மேம்படுத்திக் கொள்வதற்காக அரச சொத்துக்களை பயன்படுத்தாதிருப்பதை உறுதிப்படுத்துமாறு அரச நிறுவனங்கள் மற்றும் அதன் தலைவர்களுக்கு ஆலோசனை வழங்குமாறு



தேர்தல்கள் ஆணைக்குழு, ஜனாதிபதி செயலாளருக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தது. அந்த கடிதத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்குமாறு நிதியமைச்சின் செயலாளர் உள்ளிட்ட தரப்பினருக்கு உத்தரவிடுமாறு கோரி, தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மனு நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



# அதிபரை மாற்றுமாறு கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்!

(கே.வசந்தன்)

வவுனியா, ஸ்ரீஇராமபுரம் திருஞான சம்பந்தர் வித்தியாலத்தின் அதிபரை மாற்றுமாறு கோரி நேற்றுக் காலை பாடசாலை முன்பாக பெற்றோர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டது.

இதன்போது, ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவித்த போது –

எமது பாடசாலை கல்வி நிலையில் வீழ்ச்சி நிலையினை கண்டுள்ளது. பாடசாலையில் இடம்பெறும் வேலைத் திட்டங்கள் தொடர்பான கணக்கறிக் கைகள் எவையும் சமர்பிக்கப்படவில்லை. அங்கு இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பாக பெற்றோர்களிற்கு அறிவித்து கலந்துரையாடும் நடவடிக்கையினையும் அவர் முன்னெடுப்பதில்லை. இவ்வா றான காரணங்களால் பாடசாலை யில் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டு போகும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமை தொடர்ந்தால் பாட சாலையினை இழுத்து மூடவேண்டிய நிலைமையே ஏற்படும். எனவே உடன டியாக அவரை மாற்றித்தருமாறு உரிய அதிகாரிகளிடம் கேட்டுக்கொள் கின்றோம். – என்ற னர்.



இந்த விடயம் தொடர்பாக பாடசா லையின் அதிபரை தொடர்பு கொண்டு கேட்டபோது –

நான் பொறுப்பேற்ற பின்னர் பாடசா லையில் பல அபிவிருத்தி வேலைத் திட்டங்களை செய்துள்ளோம். குறிப்பாக வெளிநபர்களின் உதவிகளை பெற்று மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு உரிய தேவைகளை செய்துள்ளோம். வறுமைப்பட்ட மாணவர்களின் தேவை கருதி சத்துணவு திட்டத்தினை விஸ்தரித்துள்ளோம். அனைத்திற்கும் கணக்கறிக்கை சமர்பிக்கப்பட்டு அது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது.

பாடசாலையின் நிர்வாகத்தை ஒரு சில நபர்கள் சொல்வது போல நடாத்த முடியாது. சில பெற்றோர்கள் தமது பிள்ளைகள் விடயத்தில் சரியாக செயற் பட்டால் நாம் பாடசாலையில் மாணவர் களுடன் முரண்பட வேண்டிய தேவை ஏற்ப்படாது. – என்றார்.





# அருட்தந்தை அல்பன் இராஜசிங்கம் அடிகளின் குருத்துவ திருநிலைப்பாட்டின் பொன் விழா

(வாஸ் கூஞ்ஞ)

கடும் யுத்தக் காலத்திலும் மன்னாரில் மக்களுக்கு தனது சிறந்த பணிகளை மேற்கொண்டு வந்த அமல மரித் தியாகி சபையைச் சார்ந்த அருட்தந்தை அல்பன் இராஜசிங்கம் அடிகளாரின் குருத்துவ திருநிலைப்பாட்டின் பொன் விழா கடந்த சனிக்கிழமை கொண்டாடப்படுகின்றது.

அடிகளாரின் குருத்துவ திருநிலைப்பாட்டின் பொன் விழாவை முன்னிட்டு அவரின் பிறப்பிடமான யாழ் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பொன் விழா நாயகன் அருட்தந்தை அல்பன் இராஜசிங்கம் அடிகளார் (அ.ம.தி) 1944.06.22 ஆம் திகதி பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை புனித யாகப்பர் ஆண்கள் பாடசாலையிலும் தனது இடைநிலைக் கல்வியை சென்.பற்றிக்ஸ் கல்லூரியிலும் கற்றவர்.

இதைத் தொடர்ந்து இவர், 1992 ஆம் ஆண்டு சந்நியாசத்தில் இணைந்து கொகுவெல , நுகேகொடவிலும் 1966 ஆம் ஆண்டு நவசந்நியாசத்தை களுத்துறையிலும் நவசந்நியாச முதல்



வாக்குத்தத்தத்தை 1967 லிலும் 1970 இல் தனது நவசந்நியாச பயிற்சியை முடித்துக் கொண்டு 24.07.1974 குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

இதன்பின் இவர் யாழ் மறைமாவட்டத்தில் பண்டத்தரிப்பு , 1974 தொடக்கம் 1975 வரை முருங்கன் உயிலங்குளம் பங்குகளில் உதவி பங்குத் தந்தையாகவும் –

1975 தொடக்கம் 1976 வரை இளவாலை சென்.கென்றிஸ் கல்லூரியில் உதவி அதிபராகவும் –

1976 தொடக்கம் 1980 வரை அரிப்பு பங்கு தந்தையாகவும் –

பின் மன்னார் மறைமாவட்டம் உதயமாகியபின் வவுனியா, தலைமன்னார், பேசாலை, பள்ளிமுனை பங்கு தந்தையாகவும் –

இதைத் தொடர்ந்து மன்னார் வாழ்வோதயம் இயக்குந்ரகவும் பின் தாழ்வுபாடு பங்கு தந்தையாகவும் கடமை புரிந்தார். இதன்பின் யாழ் அமல மரி தியாகி சபையின் பொருளாளராக 1997 லிருந்து 2002 வரைக்கும் பொறுப் பேற்றிருந்தார்.

பின் திருகோணமலை பாலையூற்று அமல உதயம் உப்புவெளி ஆகிய வற்றால் தளது பணியை மேற்கொண்ட பின் மீண்டும் மன்னாருக்கு வருகை தந்து வஞ்சியன்குளம் அரிப்பு, மடு மாதா சிறிய குருமடம் ஆகியவற்றியில் பணியாற்றியபின் மன்னார் வயோதிபர் சங்கங்களின் ஓர் ஆலோசகராகவும் இயக்குநராகவும் பணிபுரிந்தார்.

அத்துடன் விசேடமாக முசலி மற்றும் மன்னார் பகுதி மீனவ அமைப்புகளின் யூனியனுக்கு தலைவராக 1977 லிருந்து 1980 வரை மீன்பிடி அமைச்சினால் நியமிக்கப்படடிருந்தார். 1995 லிருந்து 1997 வரை தாழ்வுபாடு மீனவ சங்கத் தலைவராக பணிபுரிந்தார்.

இவ்வாறு மன்னார் மாவட்டத்தில் 35 வருடங்கள் தனது வேறுபட்ட பணிகளை மேற்கொண்ட ஓர் அருட்பணியாளராவார். தற்பொழுது கிளிநொச்சியிலிருந்து அன்பகம் , முழங்காவில் பணியாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.






# வடக்கு மாகாணமட்ட கூடைப்பந்தாட்டப் போட்டி 17, 20 வயதுப் பிரிவுகளில் யாழ் இந்து சம்பியன்!

வடக்கு மாகாணமட்ட கூடைப்பந்தாட்ட போட்டியின் 17, 20 வயதுப்பிரிவுகளுக்கான இறுதிப் போட்டியில் யாழ் இந்துக்கல்லூரி அணிகள் சம்பியனாகியுள்ளன.

17 வயதுப் பிரிவு தொடர்ந்து ஐந்தாவது வருடமாகவும், 20 வயதுப்பிரிவு 6 வருடங்களுக்கு பின்னரும் சம்பியனாகியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் யாழ் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெற்றன.

காலையில் நடைபெற்ற 17 வயதுப்பிரிவு இறுதிப்போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ் இந்துக் கல்லூரி அணி களமிறங்கியது. போட்டியின் முடிவில் 56 : 33 என்ற என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்ற யாழ் இந்துக் கல்லூரி அணி தொடர்ச்சியாக 5 வருடங்களாக மாகணமட்ட சம்பியனாகி சிறப்பு வெற்றியை பதிவு செய்தது.

மாலையில் நடைபெற்ற 20 வயதுப்பிரிவு இறுதிப்போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ் இந்துக் கல்லூரி அணி களமிறங்கியது. மிக விறுவிறுப்பாக மேலதிக நேரம் வரையில் நடைபெற்ற போட்டியின் முடிவில் 68:67 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ் இந்துவின் 20 வயதுப்பிரிவு அணி 6 வருடங்களுக்கு பின் சம்பியனாகி வெற்றியைப் பதிவு செய்தது.






# கொள்கை வட்டி வீதங்களை மேலும் குறைக்கத் தீர்மானம்

இலங்கை மத்திய வங்கி தனது கொள்கை வட்டி வீதங்களை மேலும் குறைக்கத் தீர்மானித்துள்ளது.

மத்திய வங்கியின் நாணயக் கொள்கை சபை நேற்று முன்தினம் கூடியபோதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய, மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதமான நிலையான வைப்பு வசதி வீதம் 8.25 வீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

நிலையான கடன் வசதி வீதம் 9.25 வீதமாக குறைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், மத்திய வங்கியின் கொள்கை வட்டிவீதங்கள் 0.25 அடிப்படை புள்ளிகளால் குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# களுத்துறை மாவட்ட செயலகத்தில் நேற்று ஏற்பட்ட தீப் பரவல் கட்டுப்படுத்தப்பட்டது!

களுத்துறை மாவட்ட செயலகத்தில் நேற்றுத் தீப் பரவல் ஏற்பட்டது.

மாவட்ட செயலகத்தின் கீழ் தளத்தில் தீப்பரவல் ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை நகர சபையின் தீயணைப்பு பிரிவினரால் தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.

மின்கசிவினால் தீ பரவியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.



# பரீட்சைகள் நடத்தப்படும் காலத்தை மாற்ற திட்டம்

பரீட்சைகள் நாள்காட்டியைப் புதுப்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

பிட்டிபனையில் உள்ள களஞ்சியசாலையில் பாடசாலை பாடப்புத்தகங்களை விநியோகிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு, கல்வி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“இந்த வருடத்துக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை அடுத்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே, திட்டமிட்டபடி, நிறைவடைந்துள்ள கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் செப்டம்பர் மாதம் வெளியானால் அது சாத்தியமாகும்.

அதேநேரம், உயர் தரம் மற்றும் ஏனைய பரீட்சைகளை அதற்கு முன்னர் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது.”– என்றார்.




# பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் 47 பேருக்கு உடனடியாக இடமாற்றம்

உடன் அமுலாகும் வகையில் 47 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் சேவையின் தேவையை அடிப்படையாக் கொண்டு இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை பொலிஸ் தெரிவித்துள்ளது.

மேற்படி இடமாற்றத்திற்கு பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.



# கட்டாய உடல் தகன நடவடிக்கைக்கு மன்னிப்புக் கோரித் தப்பிக்க முடியாது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

"கொவிட் -19 தொற்று காலப்பகுதியில் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட கட்டாய உடல் தகனக் கொள்கைக்கு மன்னிப்பு கோருவதற்கான அமைச்சரவையின் முடிவை வரவேற்கின்றோம். பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு கோரிக்கையை முன்வைத்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

"முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அமைச்சரவையில் அங்கம் வகித்த அமைச்சர்கள் கட்டாய உடற் தகனக் கொள்கைக்கு அப்போது ஆதரவளித்தனர். இதன் மூலம் முஸ்லிம் மக்களின் சமய, கலாசார உரிமைகள் முற்றாக மீறப்பட்டன.

முஸ்லிம்களை இலக்கு வைத்து அடக்கமா, தகனமா என்ற விவகாரம் தொடர்பில் கோட்டாபய ராஜபக்ஷவின் அமைச்சரவை தவறான தீர்மானத்தை எடுத்தது. இந்த தீர்மானம் எந்த நபரின் அறிக்கையின் அடிப்படையில் எடுக்கப்பட்டது? அதற்கான ஆலோசனை வழங்கியவர் யார்? இந்த ஆலோசனை தொடர்பாக அரசியல் தலைமைகள் பரிசீலித்து ஆராய்ந்து பார்க்காததன் காரணம் என்ன? போன்ற விடயங்கள் தொடர்பான காரணங்களை முன்வைக்க வேண்டும். எனவே இந்த விடயத்தில் மன்னிப்பு கோரி, தப்பிக்க முடியாது." – என்றார்.

# முட்டையின் சில்லறை விலையை 40 ரூபாவாகக் குறைக்க முடியும்

## அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவிப்பு

முட்டை ஒன்றின் சில்லறை விலையை 40 ரூபாவாகக் குறைக்க முடியும் என அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலத்தில் முட்டையின் விலையைக் குறைக்க முட்டை உற்பத்தியாளர்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால், மீண்டும் இந்தியாவிலிருந்து முட்டையை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் பண்டிகைக் காலம் ஆரம்பிப்பதால், கேக் தயாரிப்பாளர்களுக்கு அதிக அளவு முட்டைகள் தேவைப்படும்.

எனவே போதுமான அளவு முட்டைகள் இல்லையென்றால், அவற்றை இறக்குமதி செய்ய வேண்டும் என்றும் அமைச்சர் நளின் பெர்னாண்டோ கூறினார்.

இது தொடர்பான இறுதித் தீர்மானம் எதிர்வரும் மூன்று நாள்களுக்குள் அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# ஓய்வூதியதாரர்களுக்கு விசேட கொடுப்பனவு



அரசாங்க சேவையின் ஓய்வூதியதாரர்களுக்காக விசேட மாதாந்த கொடுப்பனவாக 3,000 ரூபா வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அதன்படி, சம்பள முரண்பாடுகள் நிவர்த்தி செய்யப்படும் வரை 2024 செப்டெம்பர் மாதம் முதல் இந்த விசேட மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இந்தக் கொடுப்பனவு மூலம் 7 இலட்சம் ஓய்வூதியதாரர்கள் பலன் பெறுவார்கள் எனவும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தல் கட்டுப்பணத்தை ரூ. 30 லட்சமாக அதிகரிக்க வேண்டும்

## டலஸ் அழகப்பெரும எம்.பி. தெரிவிப்பு



“ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை திருத்தம் செய்ய வேண்டும். இதற்கமைய அங்கீரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளரின் கட்டுப்பணத்தை 25 லட்சமாகவும், சுயாதீன வேட்பாளரின் கட்டுப்பணத்தை 30 லட்சமாகவும் திருத்தம் செய்ய வேண்டும். அப்போது தான் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்படும்.”

– இவ்வாறு எதிரணியின் சுயாதீன உறுப்பினர் டலஸ் அழகப்பெரும சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில் –

“ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை திருத்தம் செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்‌ஷவிடம் கோரிக்கை விடுத்தது. இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

1981 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க தேர்தல் சட்டத்துக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி வேட்பாளரிடமிருந்து 50 ஆயிரம் ரூபா கட்டுப்பணமும், சுயாதீன வேட்பாளரிடமிருந்து 75 ஆயிரம் ரூபாவும் கட்டுப்பணமும் அறவிடப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளரிடமிருந்து அறவிடும் கட்டுப்பணத்தை 25 லட்சமாகவும், சுயாதீன வேட்பாளரின் கட்டுப்பணத்தை 30 லட்சமாகவும் திருத்தம் செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியது.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள். இரண்டு வேட்பாளர்களை தவிர ஏனைய வேட்பாளர்களின் கட்டுப்பணம் அரசுடமையாக்கப்பட்டது. எவ்வித மான வரையறைகளும் இல்லாமல் வேட்பாளர்கள் முன்னிலையாகுவதால் அரச நிதியே வீண்விரயமாக்கப்படுகிறது.

41 ஆண்டுகளுக்கு பின்னரே கட்டுப்பணம் தொடர்பில் திருத்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தம் அவசரமாக கொண்டு வரப்பட்டுள்ளது. அதேபோல் கட்டுப்பணம் விவகாரத்திலும் கவனம் செலுத்தி திருத்தம் ஒன்றை முன்வைக்குமாறு வலியுறுத்துகிறேன்.

இதற்கு எழுந்து பதிலளித்த சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த, அரசமைப்பின் 22 ஆவது திருத்தத்தை அவசரமாக கொண்டு வரவில்லை.

சட்டத்தையோ அல்லது சட்ட திருத்தத்தையோ விரைவாக கொண்டு வர முடியாது. கட்டுப்பணம் தொடர்பான திருத்தத்தை இடம் பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு முன்வைக்க முடியாது. அதற்கான கால வகாசம் போதாது. 2029 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் இவ் விடயம் குறித்து கவனம் செலுத்தலாம்.”– என்றார்.








# முகாமைத்துவ பீட புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு புதனன்று நடந்தது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு, பதிவு செய்த மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் மற்றும் அறிமுக நிகழ்வு கடந்த 23 ஆம் திகதி புதன்கிழமை காலை இடம்பெற்றது.

முகாமைத்துவ கற்கைகள் மறும் வணிக பீடாதிபதி பேராசிரியர் என். கெங்காதரன் தலைமையில் கலாசாலை வீதியில் அமைந்துள்ள முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

2022 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து தொழில் நிருவாகமாணி மற்றும் வணிகமாணி கற்கைநெறிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட சுமார் 600 புதுமுக மாணவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழகத்தின் பதிவாளர், நூலகர், மாணவர் நலச்சேவைகள் பணிப்பாளர் மற்றும் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் துறைத்தலைவர்கள் மற்றும் இணைப்பாளர்கள் மாணவர்களுக்கான வழிகாட்டல் மற்றும் அறிமுக உரைகளை ஆற்றினர்.









# யாழ் நீதிமன்றுக்கு வந்தவரை வாளோடு துரத்தியவர் கைது!

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றுக்கு வந்த விட்டு திரும்பிய ஒருவரை வாள் கொண்டு துரத்திச் சென்ற சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

இராசாவின் தோட்ட வீதியில் உள்ள வீடொன்றில் 24 வயதான சந்தேக நபர் பதுங்கியிருந்தபோது யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் புலனாய்வாளர்களுக்குக் கிடைத்த தகவலுக்கமைய கைதுநடவடிக்கைமுன்னெடுக்கப்பட்டது.

கடந்த மே மாதம் 30 ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றுக்கு வந்த விட்டு திரும்பிய ஒருவரை வாள் கொண்டு மூவர் துரத்திச் சென்றுள்ளனர்.

இதனால் அச்சமடைந்தவர் மீண்டும் நீதிமன்ற வளாகத்திற்குள் புகுந்து தஞ்சம் கோரியுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப் பாணம் நீதிவான் கட்டளைக்கமைய சந்தேக நபர்களை கைது செய்ய உத்தரவிடப்பட்டது.

இதனையடுத்து சந்தேக நபரொருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணப் பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

வாள் வெட்டு சம்பவங்கள் தொடர்பில் சந்தேக நபர் மீது நான்கு திறந்த பிடியாணைகள் உள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஊடகவியலாளர்களும் தபால் மூலம் வாக்களிக்க அனுமதிக்க வேண்டும் என்கிறது ஊடக அமைச்சு

"ஜனாதிபதித் தேர்தலில் ஊடகவியலாளர்களுக்கும் தபால் மூல வாக்களிப்புக்கு அனுமதி வழங்க வேண்டும். தேர்தல்கள் ஆணைக்குழு இவ்விடயம் குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும்."

– இவ்வாறு ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில் –

"ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் ஓரிரு மாதங்களில் நடைபெறவுள்ளது. தேர்தல் காலங்களில் ஊடக நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வாக்குரிமை மறுக்கப்படுகிறது. நாட்டில் 17 பதிவு செய்யப்பட்ட தொலைக்காட்சி சேவைகள் உள்ளன. அதேபோல் 52 வானொலி அலைவரிசை மற்றும் தொலைக்காட்சி சேவைகள் உள்ளன.

தேர்தல் காலத்தில் ஊடகவியலாளர்கள் செய்தி அறிக்கை மற்றும் ஒளிபரப்பு பணிகளில் ஈடுபடுவதால் அவர்களுக்கு வாக்களிப்பதற்கான வாய்ப்பு மறுக்கப்படுகிறது. ஆகவே



அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை உள்ள ஊடகவியலாளர்களுக்கு தபால் மூல வாக்களிப்புக்கு அனுமதி வழங்க வேண்டும்.

தேர்தல்கள் ஆணைக்குழு இவ்விடயம் குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும். நாடாளுமன்றத்தின் ஊடாக இந்த யோசனையை நாங்கள் முன்வைக்கிறோம்."– என்றார்.

# தயாசிறியின் மனுவில் தலையீடு செய்வதற்கு லசந்த அழகியவன்னவுக்கு அனுமதி மறுப்பு



நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் தலையீடு செய்வதற்கு அனுமதி வழங்குமாறு கோரி இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தாக்கல் செய்திருந்த மனுவில் கோரப்பட்ட இடைக்கால தடையுத்தரவை வழங்க கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று மறுத்துள்ளது.

இலங்கை சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக செயற்பட்ட தமக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு கட்சி மேற்கொண்ட தீர்மானத்திற்கு எதிராக தயாசிறி ஜயசேகரவினால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 25.07.2024


மேஷம்

உங்களின் நிஜ ஆற்றலை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள். உங்கள் இலக்குளை நிர்ணயித்து அதனை அடையச் செயலாற்றுங்கள்.

நீங்கள் கடினமாக பணியாற்றி உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்பீர்கள். உங்கள் சமயோசித புத்திக்குப் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் மகிழ்ச்சி காண்பீர்கள்.

உங்களின் தேவையின் போது உங்களுக்கு பணம் கிடைக்கும். பங்கு வர்த்தகம் உங்களுக்கு லாபம் அளிக்கும்.

இன்று உங்களிடம் ஆற்றலும் உற்சாகமும் நிறைந்து காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


ரிஷபம்

இன்று உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவீர்கள். என்றாலும் விரும்பும் பலன்களை அடைய நீங்கள் முயற்சி செய்ய வேண்டும்.

உங்கள் பணிக்கு நற்பெயர் எடுப்பீர்கள். பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது.

நீங்கள் உங்கள் துணையுடன் சகஜமாக நடந்து கொள்வீர்கள். அவரின் இதயத்தில் இடம் பிடிப்பீர்கள்.

பணவரவு அதிகமாக காணப்படும். உங்கள் முயற்சியின் மூலம் அதிக பண வரவைப் பெறுவீர்கள்.

ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். சரியான நேரத்தில் உணவு மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும்.


மிதுனம்

ஆன்மீக நிகழ்சிகள் மற்றும் சொற்பொழிவுகளில் பங்கு கொள்வது ஆறுதல் தரும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும்.

பணியில் பதட்டமான நிலைமை காணப்படும். சூழ் நிலையை அனுசரித்து நடந்தால் வெற்றி கிடைக்கும். என்றாலும் இது சற்று கடினமாக காணப்படும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். எனவே அமைதியான போக்கை மேற்கொள்வது நல்லது. எனவே அனுசரித்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

அஜாக்கிரதை மற்றும் கவனக் குறைவு காரணமாக இன்று பணம் இழப்பீர்கள். எனவே கவனமாக இருக்க வேண்டும்.


கடகம்

இன்று ஆன்மீகத்தில் ஈடுபடுவது உங்களுக்கு வழிகாட்டியாக அமையும். இத்தகைய நிகழ்வுகள் மூலம் உங்கள் நீங்கள் நன்கு உணர்ந்து கொள்ள இயலும்.

பணியிடத்தில் புதிய வாய்ப்புகள் காணப்படும். அதிக பணிகளை மேற்கொள்வதில் மகிழ்ச்சி கொள்வீர்கள். உங்கள் அர்ப்பணிப் பான பணிக்கு அங்கீகாரம் பெறுவீர்கள்.

இன்றைய நாளை நீங்கள் இனிமையாக ஆக்குவீர்கள். உங்கள் உறவில் புத்துணர்ச்சி காணப்படும்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். நிதி நிலைமை இன்று உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் தேக ஆரோக்கியத்தை சிறந்த முறையில் பராமரிப்பீர்கள்.


சிம்மம்

இன்று அமைதியான கட்டுப்பாடான அணுகுமுறை தேவை. தெய்வீகப் பாடல்கள் கேட்பது மற்றும் கேளிக்கை நிகழ்சிகளில் பங்கு கொள்வது மகிழ்ச்சி அளிக்கும்.

உங்கள் பணியில் நீங்கள் அதிக பொறுப்புகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். உங்கள் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். உறவில் அமைதியை நிலைநாட்ட நீங்கள் இதனை தவிர்க்க வேண்டும்.

இன்று பண வரவிற்கு உகந்த நாள் அல்ல. பண இழப்பு ஏற்படாமல் இருக்க நீங்கள் திட்டமிட வேண்டும்.

இன்று முழுவதும் உங்கள் ஆரோக்கியம் குன்றி காணப்படும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.


கன்னி

இன்று உங்களுக்கு உற்சாகமான நாள். நீங்கள் வளர்ச்சி நோக்கி முன்னேறுவீர்கள். திட்டமிட்டு தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் நீங்கள் வெற்றி காணலாம்.

உங்கள் பணியில் பெயரும் புகழும் பெறுவீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அன்பாகப் பழகுவதன் மூலம் நல்லிணக்கம் ஏறபடும். இதனால் இருவரும் பரஸ்பரம் மகிழ்ச்சி கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் தரத்தை உயர்த்துவதற்கு சேமிப்பு நிலையை சிறப்பாக பராமரிப்பீர்கள்.


துலாம்

உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். அதனை முழுவதுமாக பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்களுக்கு இன்று திருப்தி கிடைக்கும்.

நீங்கள் சிரத்தையுடன் உங்கள் பணிகளை முடிப்பதற்கு முயற்சி செய்வீர்கள். உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் அலுவலகப் பயணம் ஒன்றைப் பற்றி ஆலோசிப்பீர்கள். முறையாகத் திட்டமிடுவதன் மூலம் இருவரும் சிறப்பான நேரத்தை பகிர்ந்து கொள்ளலாம். இன்று உங்களிடம் கணிசமான தொகை காணப்படும். அதனை குடும்ப நலத்திற்காக செலவு செய்வீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வது உதவிகரமாக இருக்கும்..


விருச்சிகம்

இன்று சிறிது பதற்றம் காணப்படும். அதிக சௌகரியங்களை அனுபவிக்க இயலாது. நீங்கள் பொறுமையுடன் இருக்க வேண்டும். அமைதியின்மை உணர்வை தவிர்ப்பது நல்லது.

நீங்கள் உங்கள் பணிகளை முடிக்க திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். பணியில் உங்களுக்கு கெட்ட பெயர் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவிய சிறிது கவனமாக பணியாற்றவும்.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பாதிக்கபட்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். உங்கள் மதிப்பு மிக்க பொருள்களைப் பத்திரமாக வைத்துக் கொள்வது நல்லது. செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை காணப்படும். அதிக நீரைப் பருகவும். சரியான நேரத்தில் உணவருந்தவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.07.2024




இன்று நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். சௌகரியமாக இருக்க இத்தகைய சூழ்நிலையை தவிர்க்க வேண்டும். இசை கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

அதிக பணிகள் காரணமாக பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை நீங்கள் கவனமாக மேற்கொள்ள வேண்டும். அதிகமாக திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் ஏமாற்ற உணர்வு காணப்படும். இது உறவின் நல்லிணக்க ஸ்திரத்தன்மையை பாதிக்கும்.

பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். பணம் திருட்டு போக வாய்ப்புள்ளது.

இன்று சளி சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். குளிர் பானங்களை தவிர்ப்பது நல்லது.




தினசரி செயல்களை மேற்கொள்ளும் போது யதார்த்தமான அணுகுமுறை தேவை. பெரிய அளவில் செயல்கள் நடக்கும் என்று நீங்கள் எதிர்பார்த்தால் ஏமாற்றம் தான் கிடைக்கும்.

அதிக பணிகள் காரணமாக உங்கள் பணிகளில் தடைகள் காணப்படும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்டு நடந்து கொள்வீர்கள். இதனால் உறவு பாதிக்கும். உறவில் நல்லிணக்கம் காண இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று குறைந்த அளவு பணம் காணப்படும். ஆரோக்கியத்துக்காகப் பணம் கூடுதலாக செலவு ஆகும்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மேற்கொள்வதன் மூலம் பதட்டத்தை சமாளிக்கலாம்.




இன்று உங்களுக்கு வெற்றிகரமான நாள். உங்கள் முயற்சிகள் யாவும் வெற்றியை பெற்றுத் தரும். இன்று நீங்கள் அதிக பலன்களை காண்பீர்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை விரைவாகவும் எளிதாகவும் முடிப்பீர்கள். உங்களில் இருக்கும் திறமையின் மூலம் இது சாத்தியம். இது உங்களுக்கு நன்மை அளிக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான நேரத்தை பகிர்ந்து மகிழ்வீர்கள். குடும்பத்தின் பல விஷயங்களை உங்கள் துணையுடன் கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வருவீர்கள்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரும். இது உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.




உங்கள் வழக்கமான பணிகளை கவனமாக முறையாக கையாள வேண்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். ஆன்மீக நிகழ்சிகளில் ஈடுபடுவது நல்ல பலன் அளிக்கும்.

அதிகப் பணிகள் காரணமாக உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

குடும்ப பிரச்சினை ஒன்றைப் பற்றி உங்கள் துணையுடன் விவாதிப்பீர்கள். இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க இருவரும் பரஸ்பரம் கலந்து பேச வேண்டும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அதிக பொறுப்புகள் காரணமாக பணம் கூடுதலாக செலவு ஆகும். வீட்டு முன்னேற்றம் குறித்த செலவுகள் அதிகமாக காணப்படும்.உங்கள் கண்கள் மற்றும் பற்களில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனம் தேவை.






# நீங்கள் ஒரு பெண் உங்களுக்கு எதுவும் தெரியாது; பிஹார் பேரவையில் நிதிஷ் கருத்தால் சலசலப்பு



“பிஹார் சட்டப்பேரவையில் இட ஒதுக்கீடு விவகாரத்தில் எதிர்க்கட்சிகளின் அமளியால், அம்மாநில முதல்வர் முதல்வர் நிதிஷ் குமார் கடும் கோபமடைந்தார். கேள்வி எழுப்பிய ஆர்.ஜே.டி. பெண் எம்.எல்.ஏ. ரேகா பாஸ்வானை நோக்கி, “நீங்கள் ஒரு பெண், உங்களுக்கு எதுவும் தெரியாது” என்று ஆவேசமாகப் பேசியது சலசலப்பை ஏற்படுத்தியது.

பிஹார் சட்டப்பேரவையில் தற்போது மழைக்கால கூட்டத்தொடர் நடந்து வருகிறது. புதன்கிழமை அவை கூடியதும், சாதிவாரி இடஒதுக்கீடு தொடர்பாக எதிர்க்கட்சிகள் கோரிக்கை வைத்தனர். இந்தக் கோரிக்கை தொடர்பாக சபையில் எதிர்க்கட்சிகள் நடத்திய அமளியால் திடீரென கோபமடைந்த முதல்வர் நிதிஷ் குமார், ராஷ்ட்ரீய ஜனதா தளத்தின் பெண் எம்.எல்.ஏ. ஒருவரை விமர்சித்துப் பேசினார்.

இந்த விவாதத்தின்போது ஆர்.ஜே.டி. பெண் எம்எல்ஏ ரேகா பாஸ்வான் கேள்வி கேட்க, உடனே கோபமாக எழுந்த முதல்வர் நிதிஷ் குமார்,

“2005-க்குப் பிறகு, எனது அரசாங்கம் பெண்களை முன்னோக்கி கொண்டு வந்தது. அதனால்தான் இன்று உங்களால் இவ்வளவு பேச முடிகிறது. அனைத்துக் கட்சிகளையும் ஒருங்கிணைத்து இடஒதுக்கீடு வேலையை நாங்கள் செய்து முடித்தோம். உங்கள் கட்சி எங்களுடன் கூட்டணியில் இருந்த போது, அனைவரும் இதற்கு ஆதரவு அளித்தது உங்களுக்குத் தெரியும்.

நீங்கள் ஒரு பெண், உங்களுக்கு எதுவும் தெரியாது. நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? நீங்களோ அல்லது உங்கள் தரப்போ பெண்களுக்கு ஏதாவது செய்துள்ளீர்களா? 2005-க்கு பிறகு பெண்களை முன்னேற்றியது எங்கள் அரசுதான். பெண்களை உயர்த்தியவர்கள் நாங்கள்தான். பாட்னா உயர் நீதிமன்றம் சாதிவாரி இடஒதுக்கீட்டுக்கு தடை விதித்துள்ளது. ஆனால், மாநில அரசு உச்ச நீதிமன்றத்தை நாடியுள்ளது. மேலும் சாதிவாரி இடஒதுக்கீட்டை ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்க அரசு கோரிக்கை வைத்துள்ளது” என்று கோபமாக பேசினார்.

## தங்கம், வெள்ளி மீதான இறக்குமதி வரியினை குறைத்தது இந்தியா!

பிரதமர் நரேந்திர மோடியின் புதிய கூட்டணி அரசாங்கம் தனது முதலாவது வரவு - செலவு திட்டத்தை நேற்று முன்தினம் சமர்ப்பித்தது.

புதிய அரசாங்கத்தின் வரவு - செலவு திட்டத்தைத் தாக்கல் செய்த இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், இந்த பாதீட்டுத் திட்டத்தில் வேலைவாய்ப்பு, சிறு தொழில்கள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினருக்கு முக்கியத்துவம் அளித்துள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை இந்த ஆண்டு இந்தியப் பாதீட்டுத் திட்டத்தில் எடுக்கப்பட்ட சிறப்பு நடவடிக்கையாகத் தங்கம் மற்றும் வெள்ளி மீதான இறக்குமதி வரி குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி தங்கம் மற்றும் வெள்ளி மீதான இறக்குமதி வரி 15 வீதத்திலிருந்து 6 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இந்தியாவில் தங்கத்தின் விலை ஏற்கனவே குறைந்துள்ள நிலையில் உலக சந்தையில் தற்போது தங்கத்தின் விலை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






## ராகுலைச் சந்திக்க வந்த விவசாயிகள்: நாடாளுமன்ற வளாகத்தில் பரபரப்பு

நாடாளுமன்றத்தில் தன்னைச் சந்திக்க வந்த விவசாயிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டதாக, காங்கிரஸ் எம்பியும், எதிர்க்கட்சி தலைவருமான ராகுல்காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

விவசாயிகளின் கோரிக்கைகள் தொடர்பாக தனி நபர் மசோதாவொன்றைக் கொண்டு வருவது தொடர்பில் ராகுலைச் சந்திக்க 7 விவசாய சங்கங்களின் தலைவர்கள் திட்டமிட்டிருந்தனர்.

இந்த சந்திப்பானது நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள ராகுல் காந்தியின் அலுவலகத்தில் நேற்று காலை 11 மணியளவில் நடைபெறவிருந்த நிலையில் அதற்கான அனுமதி திடீரென மறுக்கப்பட்டதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் ராகுல் காந்தி கருத்துத் தெரிவிக்கையில்,

“விவசாய சங்கத் தலைவர்களை நாடாளுமன்ற வளாகத்தில் அமைந்துள்ள எனது அலுவலகத்தில் சந்திக்க அழைப்பு விடுத்தேன்.

அதற்கான அனுமதியும் முதலில் வழங்கப்பட்டது. ஆனால் அவர்கள் நாடாளுமன்றத்துக்குள் அனுமதிக்கப்படவில்லை. என்ன செய்வது? இதுதான் இங்கு காணப்படும் பிரச்சினை.”- என்றார்.

ஒகஸ்ட் 15 ஆம் திகதி விவசாயிகள் டிராக்டர் பேரணியில் ஈடுபட உள்ளதாகவும், புதிய குற்றவியல் சட்டங்களின் நகல்களை எரிக்கவுள்ளதாகவும் விவசாய சங்கங்கள் தெரிவித்திருந்த நிலையில் இவ்வாறு அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பங்களாதேஷில் போராட்டம்; இதுவரை 150 பேர் உயிரிழப்பு



பங்களாதேஷில் பல்கலைக்கழக மாணவர்களினால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் தற்போது வலுவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டமானது, அந்த நாட்டு பொலிஸாருக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்குமிடையில் மோதல்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்த மோதலில் குறைந்தது 150 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# கோவிட் பாதிப்பில் இருந்து குணமடைந்தார் ஜோ பைடன்




அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு கடந்த 17ஆம் திகதி கோவிட் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டதோடு, அவருக்கு குறைவான அறிகுறி தென்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அவர் டெலாவேரில் உள்ள வீட்டில் தன்னை தனிமைப்படுத்தி கொண்டார்.

அவரது உடல்நிலையை வைத்தியர்கள் தொடர்ந்து கண்காணித்து வந்த நிலையில் கோவிட் பாதிப்பில் இருந்து ஜோ பைடன் பூரண குணமடைந்துள்ளதாக கூறியுள்ளனர்.

இதுகுறித்து அவரது வைத்தியர் கெவின் ஓ கானர் கூறும்போது, ஜனாதிபதி ஜோ பைடனுக்கு ஆன்டிஜென் சோதனை நடத்தப்பட்டதில் அவருக்கு கோவிட் பாதிப்பு இல்லை என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர் தனது நோய்த்தொற்றில் இருந்து முழுமையாக குணமடைந்துள்ளார். அவருக்கு எந்தவிதமான அறிகுறியும் இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

இதையடுத்து ஜோபைடன் வெள்ளை மாளிகைக்கு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் கருத்துக்கணிப்பில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் கமலா முன்னிலை

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், கருத்துக் கணிப்பில் கமலா ஹாரிஸ் ட்ரம்பை பின்னுக்கு தள்ளியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் இந்த ஆண்டு நவம்பர் 5-ஆம் திகதி நடைபெறவுள்ளது.குடியரசு கட்சி சார்பில் டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் களம் இறங்குகிறார்.


ஜனநாயகக் கட்சி வேட்பாளராக இருந்த தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் தேர்தலில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ள நிலையில் துணை ஜனாதிபதியாகவுள்ள கமலா ஹாரிஸ் வேட்பாளராக முன்மொழியப்பட்டுள்ளார்.

கமலா ஹாரிஸ் மீதான எதிர்பார்ப்பு அதிகமாகியுள்ள நிலையில் சமீபத்திய அறிக்கையையொன்றில் ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்பை விட கமலா ஹாரிஸ் வெற்றி வாய்ப்பு அதிகம் என்று கூறப்பட்டுள்ளது.

மேலும், Ipsos தேசிய கருத்துக்கணிப்பின்படி, ட்ரம்பை விட கமலா ஹாரிஸ் முன்னிலையில் உள்ளார். பைடன் ஜனாதிபதி தேர்தலில் இருந்து விலகுவதாக அறிவித்ததை அடுத்து திங்கள் மற்றும் செவ்வாய்கிழமைகளில் இந்த கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது.

கருத்துக்கணிப்பில், 42 சதவீத மக்கள் டொனால்ட் ட்ரம்பை ஆதரித்துள்ளனர், 44 சதவீதம் பேர் கமலா ஹாரிஸை ஆதரித்துள்ளனர். இதற்கு முன்னதாக, இம்மாதம் 15-16 வரை நடத்தப்பட்ட கணக்கெடுப்பில், ஜூலை 1-2 வரை நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில், ட்ரம்ப் 44 சதவீதமாக இருந்தார்.

தற்போது கமலா ஹாரிஸின் ஆதரவு அதிகரித்து வருவதாக தேசிய அளவிலான ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சமீபத்தில் நடத்தப்பட்ட தேசிய கணக்கெடுப்புகளில், 56 சதவீத வாக்காளர்கள் கமலா ஹாரிஸின் வேட்புமனு மீது ஆர்வம் காட்டிள்ளதாக கூறப்படுகின்றது.




கமலா ஹாரிஸ் மனதளவில் வலிமையானவர் என்றும் சவால்களை எதிர்கொள்ளும் திறன் கொண்டவர் என்றும் அமெரிக்கர்கள் நம்புகிறார்கள்.

இருப்பினும், 78 முதல் 49 சதவீத வாக்காளர்கள் ட்ரம்ப் குறித்து இதே கருத்தை தெரிவித்தனர். 22 சதவீதம் பேர் மட்டுமே ஜோ பைடனைப் பற்றிய அதே கருத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

மற்றுதொரு ஊடகத்தின் கருத்துக் கணிப்பின்படி, தேர்தல் காலத்தில் இருந்து விலகும் பைடனின் முடிவு சரியானது என்று 87 சதவீத அமெரிக்கர்கள் கருதுகின்றனர் என கூறப்படுகின்றது.

41 சதவீதம் பேர் பைடனின் முடிவு நவம்பர் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வெற்றி வாய்ப்புகளை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கின்றனர்.

துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸின் ஜனாதிபதி வேட்புமனு ஏறக்குறைய முடிவாகியுள்ளது. ஒரு ஜனாதிபதி வேட்பாளருக்குத் தேவையான 1,976 பேரை விட, அதிக பிரதிநிதிகள் அவருக்குத் தங்கள் ஆதரவை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.